ஸ்ரீ ஹரி:

# மதுரமுரளி

செப்டம்பர் 2017 | வேணு 23 | கானம் 2

தனி பிரதி Rs 15/- | ஆண்டு சந்தா Rs 180/-

Delivered by India Post
www.indiapost.gov.in



மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்கள் அருளாசியுடன்
வெளிவரும் தெய்வீக மாதப் பத்திரிகை



SAMSKRUTI – INTERSCHOOL HERITAGE FEST, 30 July, Chennai

# மதுரமுரளி

வேணு 23; கானம் 2


ஹரே ராம ஹரே ராம
ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண
க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே

# பொருளடக்கம்


| | |
|---|---|
| மதுரமான மஹனீயர்-258 | 5 |
| அபசார சங்கடம் | 8 |
| நெகிழ வைத்த நிகழ்வுகள் | 10 |
| மஹான்களும் நதிகளும் | 11 |
| ஆரம்ப சாதகர்களுக்கும் குடும்ப வாழ்க்கையில் உள்ளவர்களுக்கான நடைமுறை மதம்/வழிபாடு | 12 |
| பக்தி சுகந்தம் | 14 |
| பாலகர்களுக்கு ஒரு கதை | 18 |
| மாதம் ஒரு சம்ஸ்க்ருத வார்த்தை | 25 |
| உள்முக மாற்றம் | 27 |
| பாரம்பர்ய பொக்கிஷங்கள் | 28 |
| சைதன்ய மஹாப்ரபு | 32 |
| படித்ததில் பிடித்தது | 36 |


NO FAME · NO SELF INTEREST · ONLY GOD · NO NAME



முன் அட்டை: நந்தோத்சவம், மதுரபுரி ஆஸ்ரமம்
பின் அட்டை: ஸத்சங்கம், பட்டுநூல் சத்திரத்தில்

राधे राधे राधे

**ராகம்: கரஹரப்ரியா**
**தாளம்: ஆதி**

**பல்லவி**

**விண்ணில் தெரிகின்றது ராதா நாமம்**
**மண்ணில் மணக்கின்றது ராதா நாமம்**

**சரணம்**

**கண்ணனின் நாவில் நடமாடிடும் நாமம்**
**அவனையே தந்திடும் ராதா நாமம்**

**ப்ரேமையின் உருவம் ராதா நாமம்**
**அமரர்களுக்கு அரிதானது ராதா நாமம்**

**பெண் இவளின் பெருமை தன்னை**
**எண்ணிலும் எழுத்திலும் வடிக்கத் தான் முடியுமோ!**

**கண்ணிலும் காதிலும் நாவிலும் என்றும்**
**எனக்கு இந்த ராதையின் நாமமே!**

# மதுரகீதம்

ஸ்ரீ ஸ்வாமிஜியுடன் வெளிநாட்டில் இருந்து வந்திருந்த பக்தர் ஒருவர் பேசிக்கொண்டிருந்தார். அப்பொழுது, அங்கு வந்த பக்தர் ஒருவர், காஞ்சி ஸ்ரீ வரதராஜப் பெருமாள், பெருந்தேவி தாயாரின் பிரசாதத்தைக் கொடுத்தார்கள். அதோடு அழகான பெருமாளின் படமும் கொடுத்தார்கள். அந்த ஸ்வாமியை (படத்தை) வாங்கிக் கண்களில் ஒத்திக்கொண்டு, தலையின் மீது வைத்துக்கொண்டு ஸ்ரீ ஸ்வாமிஜி ஆனந்தம் அடைந்தார்கள். ஸ்ரீ ஸ்வாமிஜி தன்னிடம் பேசிக் கொண்டிருந்தவரிடம், ‘‘வரதர் என்னை அழைக்கின்றார், நான் காஞ்சீபுரம் செல்லப் போகின்றேன்’’ என்றார்கள். அவர், ‘‘நானும் வருகின்றேன்’’ என்று உடன் கிளம்பினார்.

ஸ்ரீ ஸ்வாமிஜி, கோவிலுக்குள் நுழையும் நேரம் வரதர் புறப்பாடு கண்டருளி கோபுர வாசலுக்கு வந்துவிட்டார். உடனே ஸ்ரீ ஸ்வாமிஜி, அப்பா ஒரு குழந்தையைக் காண ஆர்வத்துடன் வீட்டின் வாசலுக்கே வருவதுபோல் வரதர் தன்னைக் காண வந்துவிட்டதாக கூறினார். தாயார் சந்நிதியில் நல்ல கூட்டம் இருந்தது. தெரிந்த ஒருவர் வந்து, அந்தக் கூட்டத்திலும் வசதியாக தரிசனம் செய்து வைத்தார். ‘‘தாயாருக்கு எல்லோரும் குழந்தைகள்தான். ஆனால், நான்

# மதுரமான மஹநீயர்

- Dr ஆ பாக்யநாதன்

ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின்
அந்தரங்க செயலாளர்



செல்லப்பிள்ளை. எப்படி அம்மா என்னைத் தனியே கூப்பிட்டு அருள் செய்தாள்'' என்றார். அங்கிருந்து உலகளந்த பெருமாளை ஸேவிக்க சென்றார். ஸந்நிதி திருக்காப்பிடும் நேரம். ஓடிப் போய் பெருமாளை ஸேவித்தார். போகும்பொழுதே, ''பெருமாள் காத்துக் கொண்டிருக்கின்றார். சீக்கிரம் வாருங்கள்'' என்று வேகமாக நடந்தார். கோவில் உள்ளே சென்றதும் சேவை செய்துவைத்த அர்ச்சகர், ''பெருமாள் உங்களுக்காகத்தான் காத்துக் கொண்டிருக்கின்றார். நான் சற்று முன்பாகவே கோவில் சாத்தியிருக்க வேண்டும். ஏதோ, இன்று தாமதமாகிவிட்டது. தங்களுக்காகத்தான் காத்திருக்கின்றார்'' என்றார்.

இப்படி, சென்ற கோவில்களில் எல்லாம் ஏதாவது சம்பவங்கள் நடந்துகொண்டே இருந்தன. வெளிநாட்டிலிருந்து வந்தவருக்கு ஒவ்வொரு கோவிலிலும் இப்படி ஏதாவது நடப்பதும் அதை சம்பந்தப்படுத்தி ஒரு தெய்வீகமான விளக்கம் கொடுப்பதும் விசித்ரமாக இருந்தது. உடன் வந்தவருக்கோ எல்லாம் தற்செயலாக நடக்கும் சாதாரண நிகழ்ச்சிகளாகவே தோன்றியது. அவருக்கு, இவைகள் எல்லாவற்றையும் ஸ்ரீ ஸ்வாமிஜி தனக்கே உரிய கற்பனைத் திறமையால் தெய்வீகத்துடன் இணைத்துக் கூறுவதாக தோன்றியது. ஆனால், பல இடங்களில் ஸ்ரீ ஸ்வாமிஜி முன்பாகவே சொல்வது, அங்கு போனவுடன் அப்படியே நடக்கவும் செய்தது. மெதுவாக, சமயம் பார்த்து ஸ்வாமிஜியிடம் கேட்டும் விட்டார்.

ஸ்ரீ ஸ்வாமிஜி, அப்படி கேட்டவரிடம், ''ஜோதிட சாஸ்திரத்தைப் பற்றி உங்களுக்கு ஏதாவது தெரியுமா?'' என்று கேட்டார். கேள்வி கேட்ட பக்தரோ, ''ஏதோ கொஞ்சம் தெரியும்'' என்றார். அவரிடம் ஸ்ரீ ஸ்வாமிஜி, ''ஒருவருடைய பிறந்த நேரத்தை கணித்து அதை வைத்து ஜாதகம் எழுதி பலன்களைச் சொல்வார்கள். அப்படி சொல்வதிலேயே எவ்வளவோ systems உள்ளது. இதற்கு வானியல் சாஸ்திரமும் கணித சாஸ்திரமும் தெரியவேண்டும்.''

''கை ரேகையைப் பார்த்து பலன் கூறுபவர்களும் உள்ளனர். பிறந்த தேதியை வைத்துக்கொண்டு பலன் சொல்பவர்களும் இருக்கின்றனர். கேள்வி ஏதாவது நாம் கேட்டோமானால் அதை வைத்துக்கொண்டு பலன் சொல்பவர்களும் உள்ளனர். சகுண சாஸ்திரத்தை வைத்துக் கொண்டு பலன் சொல்பவர்களும் உண்டு. உதாரணமாக கருடன் பறப்பது, பசு வலம் வருவது, ஆந்தை அலறுவது இப்படியாகப் பல உள்ளன.''

“இவைகளைத் தவிர நிமித்த சாஸ்திரம் என்ற ஒன்று உண்டு. ஒருவர் கேள்வி கேட்கும்பொழுது, அந்த நிமித்த சாஸ்திரம் தெரிந்தவர் அப்பொழுது தற்செயலாக நடக்கும் சில சம்பவங்களை அவர் கவனித்து, கேட்ட கேள்விக்கான பதிலைச் சொல்லுவார். அது அப்படியே நடக்கும். அவருக்கு, நடக்கும் சம்பவங்களைக் கேட்ட கேள்வியுடன் எப்படி இணைத்துப் பார்க்க வேண்டும் என்ற உள் உணர்வு இருக்கும்.”

“உதாரணமாக, நிமித்த சாஸ்திரம் தெரிந்தவர் railway stationல் நின்று கொண்டிருப்பார். அப்பொழுது ஒருவர், தான் எழுதிய பரிட்சையில் தேறுவேனா? என்று கேட்பார். அப்பொழுது rail signal, redல் இருந்து greenஆக மாறும். அதை கவனித்த நிமித்த சாஸ்திரம் அறிந்தவர், ‘நீ pass ஆகிவிடுவாய்’ என்பார். அப்படியே அது நடக்கும். இரண்டு நபர்கள் சேர்ந்திருக்கும் ஒரு புகைப்படத்தில் ஒருவர், ஒருவரை எடுத்துவிட்டு மற்றவரின் படத்தை மட்டும் frame செய்துகொண்டு வருவார். நிமித்த சாஸ்திரம் அறிந்தவர் இதைக் கொண்டு ஒருவர் சீக்கிரமாக மறையப் போகின்றார் என்பதைக் கூறுவார். அதுவும் அப்படியே நடக்கும்”. இவ்வாறாக ஸ்ரீ ஸ்வாமிஜி கூறினார்கள்.

‘ஒரு நிமித்த சாஸ்திரம் அறிந்த ஜோதிடனே தற்செயலாக நடக்கும் சாதாரண விஷயங்களைக் கொண்டு ஒருவருடைய வாழ்க்கையில் நடக்க இருப்பவைகளைக் கூறிவிடுகின்றான். அப்படி இருக்க, ஒரு மஹாத்மாவால், நடக்கும் சம்பவங்களைக் கொண்டு, தெய்வம் பேசுவதைப் புரிந்துகொள்ள முடியாதா?’

நாம் ஏதோ கேள்வி கேட்டால், அதற்கு ஸ்ரீ ஸ்வாமிஜி ஏதோ ஜோதிடத்தைப் பற்றிக் கூறிக்கொண்டு இருக்கின்றாரே என்று நினைத்தார் அந்த வெளிநாட்டு அன்பர். ஸ்ரீ ஸ்வாமிஜி, அவரைப் பார்த்து, “ஒரு நிமித்த சாஸ்திரம் அறிந்த ஜோதிடனே தற்செயலாக நடக்கும் சாதாரண விஷயங்களைக் கொண்டு ஒருவருடைய வாழ்க்கையில் நடக்க இருப்பவைகளைக் கூறிவிடுகின்றான். அப்படி இருக்க, ஒரு மஹாத்மாவால், நடக்கும் சம்பவங்களைக் கொண்டு, தெய்வம் பேசுவதைப் புரிந்துகொள்ள முடியாதா?” என்றார். கேள்வி கேட்டவர் வெட்கி தலை குனிந்தார்.

# அபசார சங்கடம்

தர்ம சங்கடம் என்பது பற்றி நாம் கேள்விப் பட்டிருக்கிறோம். தர்மம் என்பது நாம் அவசியம் செய்ய வேண்டிய செயலாகும். அவசியம் செய்யவேண்டிய இரண்டு தர்மங்களுக்கிடையில் இரண்டில் ஒன்றைத்தான் பின்பற்றவேண்டும் என்ற நிலை வந்தால், அது தர்ம சங்கடமாகிவிடும். ஸ்ரீமத் பாகவதத்தில் அம்பரீஷன் என்ற அரசனின் கதை வருகிறது. அதில் அந்த அரசன் மதுராவில் சென்று த்வாதசி விரதத்தை மேற்கொண்டான். அச்சமயம் துர்வாச மகரிஷி அங்கு வந்தார். அரசன் அவரை வரவேற்று உபசரித்து உணவு ஏற்கும்படி வேண்டினான். முனிவரோ, நான் யமுனையில் சென்று ஸ்நானம் செய்துவிட்டு வந்து உணவருந்துவதாகக் கூறிச் சென்றார். நமது தர்ம சாஸ்த்திரத்தின்படி, விருந்துக்கு ஒருவரை அழைத்துவிட்டு அவர் உணவருந்தாமல் நாம் உண்ணக்கூடாது. அதே நேரம், த்வாதசி திதி முடிவதற்குள் பாரணம் செய்யாவிடில் விரதத்தின் பலன் கிடைக்காது என்றும் தர்ம சாஸ்திரம் எடுத்துரைக்கிறது. ஸ்நானம் செய்யச் சென்ற முனிவர் வெகு நேரம் வரை திரும்பாததால், இரண்டு தர்மங்களில் எதைப் பின்பற்றுவது என்ற தர்ம சங்கடத்திற்கு உள்ளானான் அம்பரீஷன். இந்த மாதிரியான சங்கடத்தைத் தான் தர்ம சங்கடம் என்கிறோம்.

இதே போன்று, நான் சமீபத்தில் ஒரு அபசார சங்கடத்தில் மாட்டிக்கொண்டேன்.

ஸ்ரீ ஸ்வாமிஜி

**அபசாரம் என்பது தெய்வ விஷயத்தில் செய்யும் தவறாகும். ஒரு நாள் ராதாக்ருஷ்ண யுகள பூஜையின்போது எனது குருவின் பாதுகையும் அருகில் இருந்தது. ராதா கிருஷ்ணனுக்கு சாற்றுவதற்காக மாலையைக் கையில் எடுத்த சமயம், அது, தவறிப் பாதுகையின் மீது விழுந்துவிட்டது. நான் எனது குருவைத்தான் கடவுளாக நம்புகிறேன். அதையே மற்றவருக்கும் சொல்லி வருகிறேன். பிறகு நான் ஏன் ராதாக்ருஷ்ண யுகளத்திற்கு மாலை அணிவிக்க வேண்டும்? இந்த எண்ணம் தோன்றியதுமே, எனக்கு என்மீதே அருவருப்பு ஏற்பட்டது. உடனே சமாதானம் சொல்லிக் கொண்டேன். நமது குருபக்தியின் லட்சணம் இதுதான். 'நான் இந்த மாலையை ராதாக்ருஷ்ணனுக்கு அணிவித்தால் குரு மகிழ்வாரே. ஒரு வேளை பாதுகையின் மீது விழுந்த மாலையை இறைவனுக்கு அணிவித்தால் அதை குரு ஏற்பாரா? அபசாரமாகிவிடுமா?' ஒரு வழியாக என் மனதில் எழுந்த சந்தேகங்களுக்கு நானே முற்றுப்புள்ளி வைத்தேன். 'குரு பாதுகையின் மீது விழுந்த மாலையை இறைவனுக்கு அணிவிப்பதில் ஏற்பில்லாமல் இருப்பது அவருக்கு அழகு'. அசைக்க முடியாத நம்பிக்கை என் மனதில் இருக்குமானால், என் மனதில் இம்மாதிரியான சந்தேகங்கள் எழாது என்றும் உணர்ந்தேன். இதுவே நான் அனுபவித்த அபசார சங்கடம்.**

# நெகிழ வைத்த நிகழ்வுகள் 3

**ஸ்ரீ ஸ்வாமிஜி**

இருபத்தைந்து வருடங்களுக்கு முன்பாக ஒரு சமயம் சேங்கனூர் சென்றிருந்தேன். அப்பொழுது ஸ்ரீ ஸ்ரீ அண்ணா அவர்கள் அவதாரம் செய்த வீட்டிற்குச் சென்றிருந்தேன். ஸ்ரீ ஸ்ரீ அண்ணா அவர்களின் தாயார் மட்டும் அப்பொழுது இருந்தார். காலை ஒரு பத்து மணி இருக்கும். ஸ்ரீ ஸ்ரீ அண்ணா அவர்களின் வீட்டில் பூஜையில் இருந்த ராமரை ஸேவித்துவிட்டுக் கிளம்பலாம் என்றிருந்தேன். ஸ்ரீ ஸ்ரீ அண்ணாவின் தாயாரோ, சாப்பிடாமல் போகக்கூடாது என்று அன்புக் கட்டளை இட்டுவிட்டார்கள். உடனே, முற்றத்தில் இருந்த கைகளால் அடிக்கின்ற பம்பில்(Hand Pump) தானாகவே தண்ணீர் அடித்து எடுத்துக்கொண்டார்கள். அந்தத் தள்ளாத வயதிலும், 'என்னை பம்ப் அடி, தண்ணீர் எடுத்துக்கொண்டு வா', என்று எந்த வேலையும் சொல்லவில்லை. இரண்டு காகிதங்களைக் கொண்டு குமுட்டியைப் பற்றவைத்தார்கள். தோட்டத்தில் ஜாதி நார்த்தங்காய் இருந்தது. அதை எடுத்துவந்து பிழிந்து சாதம் கலந்தார்கள். அதை ராமருக்கு நிவேதனம் செய்துவிட்டு, சிறு குழந்தைக்கு தாயார் சாதத்தை உருட்டி உருட்டிக் கையில் போடுவது போல் போட்டார்கள். அம்ருதம் போல் இருந்தது. இதுநாள் வரையில் நான் சாப்பிட்ட எந்த உணவும் அந்த ருசிக்கு ஈடாக இருக்கவில்லை.



# மஹான்களும் நதிகளும்

**ப்ரஹ்லாதன், நாரதர், பராசரர், புண்டலீகன், வியாசர், அம்பரீஷன், சுகர், சௌனகர், பீஷ்மர் முதலான மகாத்மாக்கள் பாகவத தர்மம் என்ற உயர்ந்த பாதையை நமக்குக் காட்டியுள்ளார்கள்.**

**ஒரு நதி இயல்பாக சமுத்திரத்தை நோக்கிப் பாயும். சிலர், நதியில் தாகம் தீர்த்துக்கொள்ள வருவார்கள். சிலர், அதன் கரையில் அமர்ந்து குளிர்ந்த காற்றை அனுபவித்து மகிழ்கிறார்கள். சிலர், நதிக்கரையிலே வீடு கட்டிக்கொண்டு வசிக்கிறார்கள். சிலர், நீரைப் பயன்படுத்திக் கொள்வதோடு மின்சாரம் முதலியவற்றை எடுத்துக் கொள்கின்றனர். சிலர், விவசாயம் செய்கின்றனர். இன்னும் சிலர், நீரில் மூழ்கி எழுந்து மகிழ்கின்றனர். சிலர், படகைப் பயன்படுத்தி அக்கரைக்குச் சென்று விடுகின்றனர்.**

**பாகவத தர்மத்தைப் பின்பற்றும் ஒரு மகாத்மாவின் வாழ்வும் நதியைப் போன்றதுதான். சிலர் தங்கள் பிரச்சினைக்குத் தீர்வு காண அவரை அணுகி தாகத்தைத் தீர்த்துக்கொள்கின்றனர். சிலர் நீரை உபயோகப்படுத்தி விவசாயத்திற்கு பயன்படுத்துவதுபோல் தங்களுக்கு வேண்டியதை அவரிடமிருந்து சுரக்கும் அருளால் பெற்றுக் கொள்கின்றனர். சிலர் அவருடனேயே தங்கியிருந்து அவரது தெய்வீகத்தன்மையை அனுபவித்து ஆனந்திக்கின்றனர். சிலர் நதியில் மூழ்கி மகிழ்வார்போல், அவருடன் இணைந்து விளையாடுகின்றனர். ஒருசிலர்தான் நதி கடலை அடைவதைப்போல, அவரை எப்போதும் பின்பற்றி, முடிவற்ற நிலையை அடைந்து முக்தி எய்துகின்றனர்.**

**- ஸ்ரீ ஸ்வாமிஜி**



# ஆரம்ப சாதகர்களுக்கும் குடும்ப வாழ்க்கையில் உள்ளவர்களுக்கான நடைமுறை மதம்/வழிபாடு

**- ஸ்ரீ ஸ்வாமிஜி**

1. ஒழுங்காக சாப்பிடுங்கள். ஆனால், அவை சாத்வீகமான உணவாக இருக்கட்டும். தேவை இல்லாத, பிடிவாதமான உண்ணா நோன்புகள் நோய்களுக்கே வழிசெய்யும்.

2. சரியாக தூங்கி ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள். இல்லாவிடில், நரம்பு சம்பந்தமான நோய்களுக்கு ஆளாவீர்கள்.

3. எந்த ஒரு சாதுவை போலவோ, ஆன்மீக ஸாதகனைப் போலவோ நடிக்க முயலாதீர்கள். (போலியாக அவர்களைப் போல் இருக்க முயற்சிக்காதீர்கள்)

4. எதற்காகவும் எந்த காரணத்திற்காகவும் நீங்கள் பின்பற்றும் வழியை மாற்றிக் கொள்ளாதீர்கள்.

5. எந்தவிதமான கற்பனைகளுக்கோ பிரமைகளுக்கோ இடம் கொடுக்காதீர்கள்.

6. வாழ்க்கை, அதிலும் குறிப்பாக ஆன்மீக வாழ்கை, நடைமுறைக்கு ஒத்ததாக இருக்க வேண்டும்.

7. சும்மா இருக்காதீர்கள். அது தேவையற்ற எதிர்மறையானவற்றைக் கொண்டு சேர்த்து உங்கள் வலிமையைக் குறைத்துவிடும்.

8. மற்றவர்களும் அவர்களது செய்கைகளும் உங்கள் மேல் எளிதில் தாக்கத்தை ஏற்படுத்தாவண்ணம் இருக்க பழகிக் கொள்ளுங்கள்.

9. தூய்மை, த்யாகம், நாமகீர்த்தனம் - இவைகளே சாதகனுடைய முதுகெலும்பு.

10. உங்கள் உணர்சிகளை கட்டுபடுத்த முயற்சி செய்யுங்கள்.

11. புலம்புவதற்கு பதில் அதிகளவு நாமசங்கீர்த்தனத்தில் ஈடுபடுங்கள்.

12. உலக சுகங்களையும் அவைகளின் சம்பந்தத்தையும் தவிருங்கள்.

13. எப்பொழுதும் எளிமையாகவும் தூய்மையாகவும் இருங்கள்.

14. உங்கள் வார்த்தைகளிலும் எல்லா செயல்களிலும் கவனமாக இருங்கள்.

15. ஒரு உண்மையான சாதுவின் சங்கம் கிடைக்காதபோது தனிமையிலேயே இருக்க முயற்சி செய்யுங்கள்.

16. ஆத்ம சாக்ஷாத்காரம் சாத்யமே. ஆனால், அதே சமயத்தில், அது ஒரு மிகுந்த சிரத்தையுடன் செல்லவேண்டிய நீண்ட பயணம் என்பதை உங்கள் மனதில் இறுத்திக் கொள்ளுங்கள்.

17. எப்பொழுதும் பொறுமையாகவும் அமைதியாகவும் இருக்கவும்.

18. மனதைப் பற்றி அடிக்கடி அலசாதீர்கள்.

19. எந்த ஒரு நீண்ட தூரப் பயணம் மேற்கொள்ளும்பொழுதும் இடைஇடையே தங்கி செல்வதுண்டு. அதுபோல்தான், நமது வாழ்க்கையும். அதற்கு மேல் ஒன்றும் இல்லை.

20. எல்லாவிதத்திலும், எப்படி எல்லாம் நன்மை செய்ய முடியுமோ அப்படி நன்மைகளையே செய்ய முயற்சியுங்கள்.

21. நம்பிக்கையே மிகப் பெரிய சொத்து.

22. உங்கள் தன்னம்பிக்கையை எந்த சமயத்திலும் இழக்காதீர்கள்.



# பக்தி சுகந்தம்

ஸ்ரீ M.K. ராமானுஜம்

...நியுயார்க்கில் இரட்டை கோபுரங்களுக் கிடையில் கயிற்றின் மேல் உயரத்தில் நடந்த மனிதனைப் பற்றிக் கேள்விப் பட்டிருப்பீர்கள். உண்மையில் அது அனுமதிக்கப் படவில்லை. ஆனால், அவன் மன அழுத்தத்தை வென்று அதைச் செய்தான். எவ்வளவு பேர் அவனைக் கீழே இருந்து பார்த்துக் கொண்டிருந்தார்கள்? அன்றைக்கு அந்த நேரத்தில் அவ்வளவு உயரத்தில், காற்றின் வலிமை எத்தகையதாக இருந்திருக்கும்? அவனருகில் ஒரு சிறிய பறவை பறந்து சென்றால்கூட, அவன் நிலை தடுமாறியிருக்கக் கூடும். அதற்கு இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னால் அவன் உறங்கவே இல்லை. ஆனால், அவனால் அந்த சாதனையைச் செய்ய முடிந்தது.

நீங்கள் உங்கள் வாழ்க்கையில் ஒரு விஷயத்தைச் சாதிக்க நினைத்தால், நிச்சயம் சாதிப்பீர்கள். அப்படிச் சாதிக்க முடியவில்லை என்றால், அதைச் செய்வதற்கு உங்களிடம் போதுமான ஊக்கம் இல்லை என்று பொருள்.

நீங்கள் உங்கள் வாழ்நாளில் கண்ணனைப் பார்க்க வேண்டும் என்று நினைத்தால் நிச்சயம் முடியும். நீங்கள் கண்ணனைப் பார்க்காமல் எவ்வாறு இருக்க முடியும்? ஆனால், நீங்கள் மற்றவர்களிடம் பகட்டுக்காக “நான் கண்ணனைப் பார்க்கவேண்டும், பார்க்கவேண்டும்” என்று சொல்லிக்கொண்டு மட்டும் இருந்தால், அது எப்படி நடக்கும்? உங்கள் ஆசை உண்மையானதாக இருந்தால், உங்களது உறுதியான மனதிற்காக, அது நடந்தே ஆகவேண்டும்.

விஸ்வாமித்திரரை எடுத்துக்கொண்டால், அவர் எத்தனை முறை வழுவியிருப்பார். ஆனாலும், உறுதியான மனதுடன் இருந்தார். ஒவ்வொரு முறை வழுக்கி விழும்போதும், தன்னம்பிக்கையும், திடமான மனதும்தான் உங்களை மீண்டும் எழச் செய்யும்.

உங்களுடைய உறுதியான மனதை, நாமம் சொல்வதற்கும் அந்த வழியை விடாமல் பின்பற்றுவதற்கும் பயன்படுத்துங்கள். மார்கமே உங்களை வழி நடத்திச் செல்லும். கருணை உங்களைச் செலுத்தும். அதுவே உங்களை பாதையிலிருந்து வழுவாமலும் காக்கும். நீங்கள் விரும்பும் ஒருவர், வீட்டிலிருந்து வெளியே சென்றிருந்தால், இரவும் பகலும் அவரையே நினைத்துக்கொண்டு, அவர் திரும்பி வருவதையே ஆர்வத்துடன் எதிர்பார்த்துக் கொண்டிருப்பீர்கள் அல்லவா? எப்போது திரும்பி வருவார் என்று விடாமல் சிந்தனை ஓடிக்கொண்டே இருக்கும். அப்போது நாமஜபம் உள்பட வேறெந்த சாதனையும் செய்ய இயலாது. உங்கள் மனநிலை அப்போது எவ்வாறு இருக்கும்?

அன்புக்காக ஏங்கிக்கொண்டிருப்பது மட்டுமே உங்கள் நிலை. அன்னை, தந்தை, சகோதரர், சகோதரி, அல்லது உறவினர் போன்ற ஒரு குடும்ப உறுப்பினருக்காக இரண்டு மூன்று நாட்கள் தொடர்ந்து ஏங்கிக்கொண்டிருப்பது போல, ஸ்ரீகிருஷ்ணனுக்காக, அவன் உங்கள் முன்னால் தோன்றும்வரை ஏங்கிக் கொண்டிருக்கவேண்டும். நாமம் சொல்லச் சொல்ல அந்த ஏக்கம் மெதுவாகத் தோன்றி, வளர ஆரம்பித்துவிடும். அந்த ஏக்கத்தின் ஆழம் அதிகரித்துக்கொண்டே செல்லும். சில நேரங்களில் அழுகை வரும். அப்போது கிருஷ்ணன் உங்கள் முன் தோன்றுவான். இதைத்தான் ஏக்கம் என்று சொல்கிறார்கள்.

சகோரபட்சி சந்திரனுக்காக ஏங்குவதைப்போல. (சகோர பட்சி என்பது ஒரு தனித்துவம் வாய்ந்த பறவை, தற்போது உலகில் காணப்படுவதில்லை). அது தன் வாழ்நாள் முழுவதும் சந்திரனுக்காகவே காத்துக்கொண்டிருக்கும். அதுபோலவே கிருஷ்ணனுக்காக ஏங்கி ஏங்கிக் காத்துக் கொண்டிருக்க வேண்டும். உங்களது துக்கத்தினாலோ, வலியினாலோ, வரும் அழுகை அல்ல அது. அது தன்னலமற்ற அன்பினால் வரும் அழுகை.

நான் கண்ணனைப் பார்க்க விரும்புகிறேன் எதனால் தெரியுமா? அவன்தான் உலகின் முழுமுதற் கடவுள் என்பதற்காக அல்ல. அவனைத்தான் நான் மிக மிக அதிகமாக விரும்புகிறேன், அதற்காக.

கோபிகள் கிருஷ்ணனின் வருகைக்காக ஏங்கி அழுது துடித்தார்கள். எதற்காகத் தெரியுமா? அவன் இறைவன் என்பதற்காக அல்ல. காரணமில்லாத அன்பு அவன் மீது, அவனது சுருண்ட கேசத்தின் மீது, அவனது இசை மீது, அவனது குழல் மீது, அவனது உடை மீது, அவனது நடை உடை பாவனைகள் மீது. அவையே அவன் மீது அன்பை ஏற்படுத்தி, அவனுக்காக ஏங்கவும் வைத்தது.

சைதன்ய மஹாப்ரபு ஒரு சமயம் தமிழ்நாட்டிற்கு விஜயம் செய்தபோது, மதுரை வழியாக ராமேஸ்வரம் சென்றார். செல்லும் வழியில் மதுரையில் ஒரு ராம பக்தரது வீட்டில் தங்கியிருந்தார். அந்த பக்தர் எப்போதும் உபவாசம் இருப்பார். சாப்பிடவே மாட்டார். வெளியில் எங்கும் செல்ல மாட்டார். ஒரு அரக்கனான ராவணன் மகாலக்ஷ்மியான சீதையைத் தொட்டுவிட்டானே என்பது தான் அவருடைய வருத்தமாக இருந்தது. எப்போதும், “அம்மா, சீதா, உன்னை ஒரு அசுரன் தொட்டானே, என்னால் எப்படி உணவு கொள்ள முடியும்? எப்படி உறங்குவேன்?” என்று அழுது புலம்பிக்கொண்டே இருந்தார். மஹாப்ரபுவாலேயேகூட அவரைச் சமாதானப்படுத்த முடியவில்லை.

அதன் பிறகு, மஹாபிரபு ராமேஸ்வரம் சென்றார். அங்கு அவர் ராமாயணம் படித்துக்கொண்டிருந்தபோது, ஒரு பதிப்பில், ராவணன் சீதையின் சாயையைத்தான் தூக்கிச் சென்றான் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. உடனடியாக, மஹாபிரபு அந்தப் புத்தகத்தை ஒரு கையெழுத்துப்பிரதி எடுத்துக்கொண்டார். பிரதியை உரிமையாளரிடம் கொடுத்துவிட்டு, மூலப்புத்தகத்தை எடுத்துக்கொண்டு மதுரையை நோக்கி ஓடினார். (ஒருவேளை கையெழுத்துப் பிரதியை அந்த பக்தரிடம் காட்டினால், தன்னை சமாதானப்படுத்துவதற்காக மஹாப்ரபு அவ்வாறு எழுதியிருக்கக்கூடும் என்று அந்த பக்தர் சந்தேகிப்பார் என்பதினால்) மஹாப்ரபு மூலப்புத்தகத்தை அந்த பக்தரிடம் காட்டி, உண்மையில் சீதையை ராவணன் தொடவில்லை. அவன் தொட்டுத் தூக்கிக்கொண்டு சென்றது அவளது நிழலுருவத்தைத்தான் (சாயாசீதை). இனிமேல் நீங்கள் அழுவதில் அர்த்தம் இல்லை என்று புரியவைத்தார். அந்த பக்தர் தன் வாழ்நாள் முழுவதும் அப்படி அழுவானேன்? அதனால் அவருக்கு ஏதாவது பலன் உண்டா என்ன? பக்தியினாலே அவருக்கு அப்படி அழுகை வந்தது அல்லவா?

வாசுதேவ தாத்தா என்று ஒரு பெரிய மஹாத்மா இருந்தார். அவருக்கு சீதா ராமரின் தரிசனம் ஏற்பட்டது. அவரது கடைசி மூச்சு விடும்போது அவர் என்ன கதறினார் தெரியுமா? “ஓ

சீதா! நீ எவ்வளவு பெரிய மஹாராணி? உனது பாதங்கள் காட்டில் கல்லிலும் முள்ளிலும் நடந்தனவே. ஒரு பெரிய அரண்மனையில் சுகமாக வாழ்ந்துவிட்டு, உன்னால் எப்படி காட்டிலும் மேட்டிலும் அலைய முடிந்தது?'' என்று கதறிக்கொண்டே இருந்தார்.

பக்தியின் ஆரம்ப நிலை நாமம் சொல்வதுதான் என்று நாரதபக்தி சூத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. கோவில்களுக்குச் செல்வது, புண்ய நதிகளில் நீராடுவது போன்ற புண்ய காரியங்களைச் செய்வதின் பலனாக ஒருநாள் உங்களுக்கு உண்மையான ஸத்சங்கம் கிடைக்கும். உங்களது பக்தி அங்கு செல்வதால் இன்னும் மெருகேறும். எங்கு மக்கள் ஒருமுகப்பட்ட மனதுடன் இல்லையோ, அங்கு செல்லக்கூடாது.

உலகில் எவ்வளவோ ஸத்சங்கங்கள் இருக்கின்றன. ஆனால், பகவான் எல்லா இடங்களுக்கும் வருகிறானா என்ன? புண்ய கிரந்தங்கள் பகவான் ஸத்சங்கத்திற்கு வருவான் என்று சொல்கின்றன. ஆனால் அவ்வாறு நடப்பதில்லை. ஏன் தெரியுமா? அங்கு பங்கேற்கும் மக்களின் இலக்கு பகவானைப் பார்ப்பது அல்ல. அவர்களது நோக்கம் பணம், புகழ், அல்லது வேறு ஏதோ ஒன்று.

உங்களது பக்தி எங்கு சென்றால் வளருமோ, அங்குதான் நீங்கள் செல்லவேண்டும். இல்லையென்றால், அறியாமை உங்களை தள்ளிவிட்டுவிடும். நீங்கள் அறியாமையிலிருந்து விலகினாலே போதும், தெய்வீகம் உங்களைத் தானாகவே ஆட்கொள்ளும். பொறுமையுடன் பக்தியை வளர்த்துக் கொள்ளவேண்டும்.

உங்களுக்கு உலக விஷயங்களில் ஆர்வம் குறைந்து கொண்டே வருவதை உங்களால் உணர முடிந்தால், உங்களது பக்தி வளர்கிறது என்று பொருள். மெதுவாக நீங்கள் முன்னேறிக் கொண்டிருக்கிறீர்கள் என்பது எவ்வளவு நல்ல விஷயம்?

தொடர்ந்து இதே பாதையில் சென்றுகொண்டிருந்தால், ஒருநாள் இறைவன் உங்களுக்கு உண்மையான ப்ரேமபக்தியை திடீரென்று அருளிடுவான்.

சட்டென்று உரையை நிறுத்தினார் குருநாதர். மனதில் புதிய உற்சாகம் பிறந்தவர்களாக, பக்தர்கள் அமைதியாக எழுந்து தன்னலமற்ற உயர்ந்த ப்ரேம பக்தியை தங்களுக்கும் அருளும்படி மனதிற்குள் வேண்டிக்கொண்டு கலைந்து சென்றனர்.

# பேராசிரியரும் மகனும்

**(சென்ற இதழ் தொடர்ச்சி)**

பாட்டிக்கு ஒரு கதை

பேராசிரியரான தந்தை, மகனுடன் வீட்டிற்கு வந்தவுடன் புத்திசாலியான தமது மகனைப் பற்றி மிகவும் சந்தோஷப்பட்டார். அவனுடன் தன் கிராமத்திற்குச் சென்று வந்ததிலிருந்து அவருக்கு மகனுக்கு ஏதாவது மேலும் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்று குறுகுறுப்பு இருந்து வந்தது.

ஒருநாள் மாலை, அவர் மூன்று பொம்மைகளைக் கொண்டு வந்திருந்தார். அவர் வீட்டிற்கு வந்தவுடன் அப்பொம்மைகளை மேஜை முன் வைத்து தன் மகனை உற்சாகமாக அழைத்தார். மறுநாள் விநாயகர் சதுர்த்தியானபடியால் மகன் பிள்ளையார் பூஜைக்காக பழங்களும் மலர்களும் எடுத்து வைத்துக் கொண்டிருந்தான். தந்தையார் கூப்பிட்டவுடன் கையில் அருகம்புல்லுடன் வந்தான்.

அதைப் பார்த்தவுடன் தந்தை அவன் கையில் இருந்த அருகம்புல்லில் இருந்து ஒன்றை வாங்கி தன் கையில் வைத்துக் கொண்டு, ‘‘இப்பொழுது நான் என்ன செய்கிறேன் என்று பார்’’ என்றார். முதலில் ஒரு அருகம்புல்லை ஒரு பொம்மையின் காதில் விட்டார். அது மறு காது வழியாக வந்துவிட்டது. அதை அப்படியே விட்டு விட்டு, மற்றொரு புல்லை வங்கி அடுத்த பொம்மையின் காதில் விட்டார்.

அது வாய் வழியே வந்துவிட்டது. அப்படியே மூன்றாவது பொம்மையின் காதில் விட்ட புல்லோ வெளியே வரவே இல்லை. “இதைப் பார்த்தாயா. இது அக்பர்-பீர்பாலை பற்றிய ஒரு அருமையான கதையின் விஷயம். கவனமாக்க கேள்” என்றார் பேராசிரியர். மகன் ஆர்வமானான். மூன்று பொம்மைகளும் மூன்று வகையான நபர்களைப் பற்றிச் சொல்கின்றன. ஒருவர் காதில் கேட்கும் விஷயத்தை மறுகாது வழியாக விட்டு விடுவார். அவரால் ஒன்றும் பிரயோஜனமில்லை. மற்றொரு வகையினர், காதால் கேட்பதனைத்தையும் கொஞ்சம் கேட்டால் அப்படியே வாய் வழியே கொட்டி விடுவர். இதனாலும் பிரயோஜனம் இல்லை. மூன்றாமவர்கள்தான் நன்கு பயன்படக்கூடியவர்கள். நம்பிக்கைக்கும் உரியவர்கள். அவர்களிடம் சொல்லும் விஷயம் அவர்கள் இதயத்தில் தங்கி விடும்” என்றார்.

அதைக் கேட்டு சிறிது நேரம் சிந்தித்தவாறு இருந்த மகன், தந்தையைப் பார்த்து “தந்தையே! சரியாகச் சொன்னீர்கள். இது மற்றொரு விஷயத்தையும் சொல்லுகிறது என நினைக்கிறேன். எப்படி என்றால், வயிறுக்கு ஆகாரம் வாய் வழியே எப்படியோ அப்படி காது வழியே கேட்பதும் மனதிற்கு ஆகாரம்தானே. சில கெட்ட உணவை முழுவதும் துப்பிவிடுகிறோம். காரணம் அவை கெடுதி. அதுபோல் சிலவற்றை முற்றிலும் கேட்காதது போல் மறுகாதில் விட்டாற்போல் இருந்து விட வேண்டும். சில உணவுகள் கடித்து சாறு எடுத்து பின் துப்ப வேண்டியவை. அதுபோல் சிலவற்றைக் கேட்டு மற்றவருக்கும் சொல்ல வேண்டும். அவை நல்ல விஷயங்களான பொறுமை போன்ற நற்குணங்களும் நற்கதைகளும். இவற்றை பிரச்சாரம் செய்ய வேண்டும். சில உணவுகளை முழுவதுமாக எடுத்துக் கொண்டு ஜீரணித்து விடுகிறோம். அப்படி சில விஷயங்களை காது வழியே கேட்டாலும் அவற்றை இதயத்தில் நிறுத்தி அப்யாசம் செய்து அனுபவத்தில் கொண்டு வர வேண்டும். அப்பொழுதுதான் அது நன்கு பிறருக்கும் பயன்படுமாறு அமையும். ஆக, நீங்கள் மூன்று பொம்மைகளை வைத்துச் சொன்ன விஷயங்கள் மூன்று வகையான மனிதர்களை பற்றியது எனினும் அவற்றை காது வழியாக கேட்கும் விஷயங்களை எப்படி முவ்விதமாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றே நான் எடுத்துக் கொள்ள விரும்புகிறேன்” என்றான்.

அதைக் கேட்ட பேராசிரியர் திகைத்துப் போனார். தன் மகன் சொன்னதை தாம் கேட்டதில் எதுவும் தாம் வெளியில் விடுவதற்கு இல்லை என்பதையும் அவை இருதயத்தில் நிறுத்தி அப்யாசித்து பின்னர் பிறருக்கு சொல்ல வேண்டியது என்றும், தாம் தம் மகனிடம் கற்றுக் கொள்ள வேண்டியது நிறைய உள்ளது என்று அறிந்து சந்தோஷம் அடைந்தார்.

# செய்திகள்

**மாதுரீஸகீ ஸமேத ஸ்ரீ ப்ரேமிகவரதனின் 24வது வருட ப்ரஹ்மோத்ஸவம் மஹாரண்யம் மதுரபுரி ஆஸ்ரமத்தில் 14-08-17 முதல் 23-08-17 வரை கொண்டாடப்பட்டது. மதுரபுரி ஆஸ்ரமம் மட்டுமல்லாது மதுரை, கடலூர், விருதுநகர், அம்பை, தூத்துக்குடி, சிவகாசி, சேலம், திருச்சி, பெரியகுளம், உடுமலைப்பேட்டை, தஞ்சாவூர், பம்மல், ஓசூர் மற்றும் பெங்களூரு ஆகிய இடங்களில் ஸ்ரீ க்ருஷ்ண ஜென்மாஷ்டமி 10 நாள் உத்ஸவமாக, ஆங்காங்கே உள்ள பக்தர்களும் கலந்துகொள்ளும் விதத்தில், சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. மேலும், இந்தியாவிலும் உலகின் பிற பகுதிகளில் உள்ள நாமத்வார்கள் & GOD சத்சங்கங்களில் கோகுலாஷ்டமி மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. 14-08-17 அன்று இரவு மதுரபுரி ஆஸ்ரமத்தில் மாதுரீ ஸகீ ஸமேத ப்ரேமிகவரதனுக்கு ஸஹஸ்ரதாரை திருமஞ்சனம் செய்து, குழந்தைக் கண்ணனைத் தொட்டிலில்லிட்டு பாகவதர்கள் பாட, சிறுமிகள் கோலாட்டம் போட உத்ஸவம் ஆரம்பமாகியது. 15-08-17 அன்று முதல் 22-08-17 வரை காலையில் மாதுரீஸகீ ஸமேத ஸ்ரீ ப்ரேமிகவரதன் பல்லக்கில் புறப்பாடு கண்டருளினான். ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் தசமஸ்கந்த உபன்யாசம் காலையிலும் மாலையிலும் நடைபெற்றது. மாலையில் ஸஹஸ்ரநாம பாராயணத்திற்குப் பிறகு மாதுரீஸகீ ஸமேத ஸ்ரீ ப்ரேமிகவரதன் வாஹனங்களில் புறப்பாடு கண்டருளினான். இரவு, பாகவதோத்தமர்கள் ஒவ்வொரு நாளும் திவ்யநாமம் செய்தனர்.**

**$15^{th}$ அன்று காலையில் நந்தோத்ஸவம், $16^{th}$ அன்று வனபோஜனம், $18^{th}$ அன்று ஏகாதசி, $19^{th}$ அன்று கோவிந்த பட்டாபிஷேகம், $20^{th}$ நிகுஞ்சோத்ஸவத்தில் குமாரி விஷ்ணுப்ரியாவின் பரதநாட்டியம், $21^{st}$ ஞானவாசம், $22^{nd}$ அன்று காலையில் ஸ்ரீ ராதா கல்யாண மஹோத்ஸவம், $23^{rd}$ அன்று ரதோத்ஸவம் மற்றும் விடையாற்றி நடைபெற்றது.**

**2 ஆகஸ்டு 2017**

**கோவிந்தபுரத்தில் யோகி ராம்சுரத்குமார் நாமாஸ்ரமம் மூன்றாம் வருட பிரதிஷ்டா தின வைபவம் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் முன்னிலையில் மிகவும் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.**

**4 ஆகஸ்டு 2017**

**மதுரபுரி ஆஸ்ரமத்தில், கோகுலம் கோசாலையில், ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களால் வரலக்ஷ்மி பூஜை சிறப்பாக நடைபெற்றது.**

**5 ஆகஸ்டு 2017**

**ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் வடமங்களம் கிராமம், பட்டுநூல்சத்திரம், மற்றும் ஸ்ரீபெரும்புதூர் ஆகிய இடங்களுக்கு விஜயம் செய்து அங்கு நடைபெற்ற ஸத்சங்கங்களில் கலந்துகொண்டார்கள்.**

**30 ஜூலை 2017**

**சென்னையில் Global Organisation for Divinity சார்பில் ‘ஸம்ஸ்க்ருதி’ - பள்ளி மாணாக்கர்களுக்கான ஓவியம் மற்றும் பேச்சுப் போட்டிகள் நடைபெற்றன. Global Warming - A warning என்பதை மையமாக வைத்து நடைபெற்ற போட்டிகளில் சுமார் 1000 மாணவ மாணவியர் கலந்துகொண்டனர்.**

**முரளிஜி, 1 ஆகஸ்டு திருத்தணி பள்ளிகளில் 1250 மாணவ மாணவியரிடையே, 2 ஆகஸ்டு சென்னை பம்மலில் 750 மாணவ மாணவியரிடையே, 4 ஆகஸ்டு திருவள்ளூர் பள்ளிகளில் 750 மாணவ மாணவியரிடையே கூட்டுப்பிரார்த்தனை நிகழ்த்தினார்கள்.**

**3 ஆகஸ்டு 2017**

**மஹாரண்யம் ஸ்ரீ கல்யாண ஸ்ரீநிவாஸப்பெருமாள் திருக்கோயிலில், ஸ்ரீ பம்மல் பாலாஜி மற்றும் களத்துப்பேட்டை கௌதம் ஆகியவர்கள் தொழிற்சாலை ஊழியர்களுக்கான கூட்டுப்பிரார்த்தனையை நிகழ்த்தினார்கள்.**

**12 ஆகஸ்டு 2017**

**சென்னை மயிலாப்பூர் பாரதீய வித்யா பவனில், பள்ளி மாணவர்களிடையே நடைபெற்ற ‘புராநவா’ - Inter School Indian Heritage Quiz போட்டியில், மூவர் மூவராக 120 குழுக்கள் பங்கேற்றது. Bhavans Rajaji Vidyashram பள்ளி முதல் இடம் பெற்றது. ஸ்ரீ ராமானுஜம்ஜி மிகவும் சுவாரஸ்யமாக கேள்விக் கணைகளைத் தொடுத்து சிறப்பாக நிகழ்ச்சியை நடத்தினார்.**

**15 ஆகஸ்டு 2017**

**மதுரபுரி ஆஸ்ரம வளாகத்தில் ஸ்ரீ ஸாந்தீபனி குருகுலத்தில் சுதந்திர தினம் கொண்டாடப்பட்டது. பிரின்சிபால் ப்ருஹ்மஸ்ரீ பாலாஜி முன்னிலையில் ராமானுஜம்ஜி தேசியக்கொடி ஏற்றினார்கள். எல்லா வருடம்போல் இவ்வருடமும் GOD INDIA TRUST மற்றும் தூத்துக்குடி ஸ்ரீ சக்தி ஸ்ரீநிவாசன் அறக்கட்டளையும் இணைந்து மஹாரண்யம் மற்றும் வெள்ளரை கிராம பள்ளிகளில் மாணாக்கர்களுக்கு சீருடை, சான்றிதழ் மற்றும் பரிசுகளை வழங்கின. இதில், Dr பாக்யநாதன்ஜியும் ஸ்ரீ சக்தி ஸ்ரீநிவாசன் அறக்கட்டளையை சேர்ந்த திரு. கண்ணன் மற்றும் திருமதி மாலா கண்ணன் கலந்துகொண்டு மாணாக்கர்களுக்கு பரிசுகளும் சிறந்த முறையில் பயிற்றுவித்த ஆசிரியர்களுக்கு ரொக்கப்பரிசும் சான்றிதழும் வழங்கினர். மஹாரண்யம் பள்ளியில் பாக்யநாதன்ஜி தேசியக் கொடியேற்றி மரக்கன்றும் நட்டார்.**

**Our Humble Pranams to the Lotus feet of His Holiness Sri Sri Muralidhara Swamiji**



**Gururam Consulting Private Ltd**

**மாதம் ஒரு**
**சம்ஸ்க்ருத வார்த்தை**
**- ஸ்ரீ விஷ்ணுப்ரியா**

# பிம்ப

பிம்பம் என்றால் ஸம்ஸ்க்ருதத்தில் நிழல் அல்லது image, shadow என்று அர்த்தம். ராமாயணத்தில் 'பிம்பாத் இவார்த்திதெள பிம்போ ராமதேஹாத் ததாபரெள' என்கிறார். அதாவது, ஒரு உருவத்திலிருந்து அதன் நிழல் கிளம்பி தனியாக வந்தால் எப்படி இருக்குமோ அப்படி லவ குசர்களைப் பார்த்தால் ஸ்ரீராமரே மற்றொரு உருவம் எடுத்து வந்தது போல் இருந்தார்கள் என்கிறார்.

'பிரதிபிம்ப' என்றாலும் கண்ணாடியில் தெரியக்கூடிய நமது reflection என்று அர்த்தம். அதனால்தான் வேதாந்தத்தில் பிம்ப பிரதிபிம்பவாதம் என்று ஒரு பிரசித்தமான வாதம் உண்டு, அதாவது பிரம்மம்தான் பிம்பம். அதன் reflection தான் இந்த ஜீவன் கண்ணாடியில் நமது உருவம் பிரதிபலிப்பதுபோல், பிரம்மம் அந்த:கரணம் எனும் கண்ணாடியில் பிரதிபலித்து ஜீவனாகத் தோற்றம் அளிக்கிறது என்கிறார்கள்.

ஒளி வட்டத்திற்கும் பிம்பம் என்று பொருள் உண்டு. சந்திர பிம்பம் அல்லது சூர்யபிம்பம், என்று சொல்லுவதுண்டு. அதாவது சந்திரன் அல்லது ஸூரியனின் ஒளி வட்டம் என்று அர்த்தம்.

ஒரு மூர்த்தி அல்லது சிலைக்கு பிம்பம் என்று தான் பெயர். அதனால்தான் பாகவதத்தில் 'பிம்பம் பகவதோ யத்ர' என்று எங்கெல்லாம் பகவானுடைய மூர்த்தி, அதாவது அர்ச்சாவதாரம் உள்ளதோ, அவை எல்லாம் புண்யமான தேசங்கள் என்று கூறுகின்றது. பிம்ப-த்தின் மற்றொரு பொருள் என்னவென்றால், பிம்ப என்பது ஒரு பழத்தின் பெயர். சிவப்பு நிறத்தில் இருக்கக்கூடிய கோவைப் பழத்திற்கு 'பிம்ப பலம்' என்று பெயர். பொதுவாக சிவந்ததான அதரங்களை அதாவது உதடுகளை வர்ணிக்கும்போது இந்தப் பழத்துடன் ஒப்பிடுவதுண்டு. பிம்போஷ்டம், அல்லது பிம்பாதரம் என்று புராணங்களில் பதங்கள் இருப்பதைக் காணலாம். பொதுவாக காவியங்களில் பெண்களின் அதரங்களை வர்ணிப்பதற்கே இதைச் சொன்னபோதிலும், ப்ரத்யேகமாக பகவானுடைய அதரங்களுக்கே பிம்பாதரம் என்ற பதம் மிகவும் பொருந்தும். அதனால்தான் நாம் பாடும்போது, 'கோமள பிம்பாதரா கோபாலா.' என்று பாடுகிறோம். பகவான் கிருஷ்ணனுடைய அதரங்கள் கோவைப் பழம் போன்று சிவந்ததாகவும், ம்ருதுவாகவும் இருக்கும் என்பதால்தான் அப்படிப் பாடுகிறோம். இவ்வாறு பல அர்த்தங்கள் உள்ளது இந்த வார்த்தைக்கு.


HUMBLE PRANAMS AT

THE LOTUS FEET OF GURUJI

DR SHRIRAAM MAHADEVAN

Consultant Endocrinologist

Endocrine & Speciality Clinic

Sri Ganesh Flats, Flat No 4, Ground floor,

Old no.72, New No 460, TTK Road, Alwarpet, Chennai 600018

Tel: 044-24350090, Mob: 9445880090

Email: mshriraam@gmail.com


www.chennaiendocrine.com

# உள்முக மாற்றம்

உறவுகளாலும், தொடர்புகளாலும், உணர்வுகளாலும் ஆன இவ்வுலகம் ஒரு கண்ணாடியைப் போன்றது. கண்ணுக்குக் கீழே மிக அருகே உள்ள காயத்தை கண்ணால் நேரடியாகப் பார்க்க இயலாது. நாம் கண்ணாடியைப் பார்த்துத்தான் மருந்து போட்டுக்கொள்ள வேண்டும். நமது கண்ணுக்குக் காயம் தெரியாதபோதும், கண்ணாடியில் தெரிகிறதல்லவா? இதே கருத்தைக் கொண்டு மனத்தையும் கவனித்தல் வேண்டும். மற்றவரிடம் நமக்குக் குறைகள் தென்படும்போது, இதைப் பார்த்தோமானால், உண்மையில் நம்மிடம் உள்ள குறைதான் அவர்கள் மீது தெரிகின்றது. நாம் நமது மனத்தின் முன்னேற்றத்தில் கவனம் செலுத்தினால், மற்றவர் மீது நமக்குத் தெரியும் குறைகளும் களையைப் பட்டுவிடும். நாம் எப்போதுமே மற்றவரைத் திருத்த முயற்சி மேற்கொண்டுவரும் அதே நேரத்தில், நமது உள்முக மாற்றத்திலும் கவனம் செலுத்துதல் மிக மிக அவசியமாகிறது.

- M.K. ராமானுஜம்






# பாரம்பர்ய பொக்கிஷங்கள்

## பண்டைய இந்தியாவில் கணிதம்

### பூஜ்ஜியம் - இந்தியர்களின் கண்டுபிடிப்பு

**பூஜ்ஜியம் என்பது இட மதிப்பீட்டு முறைக்கு உதவியதோடு அல்லாமல் அது நேர்மறை(+ve) மற்றும் எதிர்மறை(-ve) எண்களை வேறுபடுத்த உதவியது.**

### ஈருறுப்பு தேற்றம் (Binomial Theorem)

**மேரு ப்ரஸ்தாரமே தற்பொழுது பாஸ்கல் முக்கோணம்(Pascal's Triangle) என்று அறியப்படுகின்றது. இதிலிருந்து, ஈருறுப்பு தேற்றத்தின் விரிவுக் குணகத்தை(coefficient of expansion) பெறலாம்.**

**(a + b)2 = $nC_0a^n + nC_1a^{n-1}b + \ldots\ldots + nC_nb^n$**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **a** | | | | | **1** | | | | |
| **a + b** | | | | **1** | | **1** | | | |
| **$(a+b)^2$** | | | **1** | | **2** | | **1** | | |
| **$(a+b)^3$** | | **1** | | **3** | | **3** | | **1** | |
| **$(a+b)^4$** | **1** | | **4** | | **6** | | **4** | | **1** |

### இருபடிச் சமன்பாடு (Quadratic Equation)

चतुराहतवर्गसमरूपैः पक्षद्वयं गुणयेत् ।
पूर्वव्यक्तस्य कृतेः समरूपाणि क्षिपेत् तयोरेव ॥

300 BC யின் ஸ்தனங்க சூத்திரத்தில் (Sthananga Sustra) $ax^2 + bx + c = 0$ சமன்பாடு கொடுக்கப்பட்டுள்ளது. 7வது நூற்றாண்டின் ப்ரஹ்மகுப்தா இருபடி சமன்பாட்டின் விடைக்கான விதிமுறைகளைக் கொடுக்கின்றார். ஆனால் தற்பொழுது பள்ளிகளில் ஸ்ரீதராச்சாரியரின் தீர்வே போதிக்கப்படுகின்றது.

$ax^2 + bx + c$ தீர்வாக, $x = \sqrt{b^2\text{-}4ac}\text{-}b/2a$

## வடிவியல் (Geometry)

5வது நூற்றாண்டிலேயே ஆரியபட்டா π(Pi) மதிப்பை பின்வருமாறு கூறுகின்றார்.

चतुरधिकं शतमष्टगुणं द्वाषष्टिस्तथा सहस्राणाम् |
अयुतद्वयविष्कम्भस्यासन्नो वृत्तपरिणाहः ||

62832 என்கின்ற எண்ணை 20000 கொண்டு வகுத்தால் Pi யினுடைய தோராய மதிப்பாக 3.1416 கிடைக்கும். இந்த சூத்திரத்தில் ஆரியபட்டா 'தோராயமாக' என்று குறிப்பிடுகின்றார். ஏனென்றால், 3.1416 என்பது Piயின் உண்மையான மதிப்பு இல்லை, அது தோராயமே. Piயின் உண்மையான மதிப்பு 3.1415926535897932384626433832792.. ஆகும்.

## பகா எண் (Prime Number)

பகா எண்ணிற்கு தனியான ஒரு பெயர் பண்டைய இந்திய கணித முறையில் இல்லை. ஆனால், பரிகரனகடஸ்தய என்ற ஆசிரியரின் பெயர் தெரியாத ஒரு ஆய்வுக் கட்டுரையில் பகா எண்ணைப் பற்றிய குறிப்பு உள்ளது. டாக்டர் ஹயஷி என்கின்ற ஜப்பானிய ஆய்வாளர் சமீபத்தில் பகா எண்ணைப் பற்றிய எழுத்துப் பூர்வ வரிகளாக பின்வருபவற்றைக் கூறுகின்றார்.

षट् त्रिकं पँचषटकाञ्च सप्त चादौ प्रतिष्टितम् |
त्रयस्त्रिंशत् संगुणितं कण्ठाभरणमादिशेत् ||

## எண் வரிசைக்கோடு(Number Line)

பாஸ்கராவின் பிஜகணிதத்தின் விரிவுரையாளர் நேர் மற்றும் எதிர் மறை எண்களின் கூட்டல் மற்றும் கழித்தலை, எண் கோட்டில் உள்ள புள்ளிகளைக் கொண்டு பெறலாம் என்று கூறுகின்றார்.

## சேர்வு (Combination)

**பாஸ்கரா பின்வரும் அழகான உதாரணத்தைக் கொடுக்கின்றார்,**

एकद्वित्र्यादिमूषावहनमितिमह्ले ब्रूहि भूमिभर्तुः ।
हर्म्ये रम्येऽष्टमूषे चतुरविरचितश्लक्ष्णशालाविशाले ॥

**ஒரு ராஜா 8 கதவுகளைக் கொண்ட அரண்மனையில் வாழ்ந்தான். அவன் இயற்கைக் காற்றைப் பெற எத்தனை வகையான சாத்தியக்கூற்றில் கதவுகளைத் திறக்கலாம்?**

$8C_1 + 8C_2 + 8C_3 + 8C_4 + 8C_5 + 8C_6 + 8C_7 + 8C_8$ **= 8 + 28 + 56 + 70 + 56 + 28 + 8 + 1 = 255 சாத்தியக் கூறு உள்ளது.** $8C_1$ **என்பது 8 கதவில் 1 கதவினைத் திறப்பதற்கான சாத்தியக்கூறு.** $8C_2$ **என்பது 8 கதவில் 2 கதவினைத் திறப்பதற்கான சாத்தியக்கூறு.**

**இந்திய கணித மேதைகளின் அரிய படைப்பு இந்த இருபதாவது நூற்றாண்டில் கூடத் தொடர்ந்துகொண்டுதான் உள்ளது. கணிதமேதை ராமானுஜரின் தீர்வுகள் இன்னும் நிருபிக்கப்பட வேண்டியுள்ளது என்பதே அதற்கு சாட்சி!**

### ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் அமுதமொழி

**வேலையை முடித்துவிட்டு இரண்டு சகோதரர்கள் வெவ்வேறு இடங்களிலிருந்து வீடு திரும்பிக்கொண்டிருக்கிறார்கள். இருவருமே வீட்டை நோக்கி மிக வேகமாக ஓடி வருகிறார்கள். முதலாமவரைத் திருடர்கள் துரத்துவதால், அவர்களிடமிருந்து தப்பிக்க வேகமாக ஓடினார். இரண்டாமவர், காலையில் வேலைக்குச் செல்ல நேரிட்டதால், விட்டுப் பிரிந்து வந்த வயதான தாய் தந்தையர் பற்றிய கவலையால் ஓடினார். இருவருமே ஓடினார்கள் என்றாலும், ஓடியதன் காரணம் வெவ்வேறல்லவா? அதுபோல, சிலர் உலக இன்பங்களில் மாட்டிக்கொண்டு படும் துன்பத்திற்கு பயந்து இறைவனை நோக்கி ஓடுகின்றனர். வேறு சிலரோ, இறைவனைக் காணும் ஆர்வத்தினால், பக்தியினால், அன்பின் மிகுதியால் அவனை நோக்கி ஓடுகின்றனர்.**

# சனாதன புதிர் 100

ஆத்ரேயன்

1. ஸ்ரீ கிருஷ்ண கர்ணாம்ருதத்தில் மொத்தம் எத்தனை ஆஸ்வாஸங்கள் உள்ளன? எத்தனை ஸ்லோகங்கள்?
2. நித்திய கர்மானுஷ்டானங்கள் (ஸந்தியாவந்தனம், தேவபூஜை, பித்ரு பூஜை) - இவைகள் தேவையில்லை. கிருஷ்ணனை சதா சர்வகாலமும் நினைக்கும் பக்தியே போதும். இது என் நம்பிக்கை என்று சொல்லியவர் யார்?
3. அஷ்டபுஜ கோபாலகிருஷ்ணன் உருவத்தை தியானிப்பவர்களுக்கு பல யோக சித்திகள் கிட்டும். இந்த அபூர்வ திருக்கோலம் எங்கே காணப்படுகிறது.
4. சித்சோர் - சித்தசோரன் என்று யாரைக் கூறுகிறார்கள்?
5. அங்கனாமங்கனாமந்தரே மாதவ: என்று கும்மி, கோலாட்ட மெட்டில் பாடப்படும் ஸ்லோகங்கள் எங்கே காணப்படுகின்றன? இந்த 8 ஸ்லோகங்களின் கடைசி வரி என்ன?
6. பில்வமங்களாவின் குருவின் பெயர் என்ன?
7. மதனகோபாலவிலாச வேஷத்தை லீலாசுகர் எங்கே விவரிக்கிறார்? இந்த திருக்கோலத்தை ஸ்ரீ வித்யா உபாஸனையில் எப்படி சொல்லுகிறார்கள்?
8. வாஸுதேவ மஹாமந்திரம் என்பது என்ன? அதை யாருக்கு யார் உபதேசித்தார்?
9. கோவிந்த தாமோதர ஸ்தோத்திரம் என்று 72 ஸ்லோகங்கள் கொண்ட நூல் உள்ளது. அதை எழுதியது யார்?
10. லீலாசுகர் ஒரு வீரசைவர். பஞ்சாக்ஷர மந்திரத்தை தீவிரமாக ஜபித்தவர். கண்ணனுடைய தீவிர பக்தனாகிவிட்டேன் என்கிறார். இது எங்கே காணப்படுகிறது?

## பதில்கள்

1. மூன்று ஆஸ்வாஸங்கள் - 109, 109, 108 ஆக 326 ஸ்லோகங்கள்
2. பில்வமங்களா என்ற லீலாசுகர் - (ஸ்லோகம் 106, 2 வது ஆஸ்வாஸம்)
3. ஸ்லோகம் 98 - மூன்றாவது ஆஸ்வாஸம்
4. பகவான் க்ருஷ்ணனை - பக்தர்களின் சித்தங்களைக் கவர்கிறான்
5. இரண்டாவது ஆஸ்வாஸம் - ஸ்லோகங்கள் 35 முதல் 42 வரை - குதித்து, கும்மியடித்து, கோலாட்டம் போட்டு பாடப்படும் பாடல்கள் ஸஞ்ஜகௌ வேணுநா தேவகீ நந்தன: என்று முடியும்.
6. ஸோமகிரி
7. ஆஸ்வாஸம் - 3, ஸ்லோகம் - 104 இதை கோபாலஸுந்தரி / ஸ்ரீவித்யா ராஜகோபாலன் என்றும் சொல்கிறார்கள்.
8. "ஓம் நமோ பகவதே வாஸுதேவாய" நாரதர் த்ருவனுக்கு உபதேசித்தார்.
9. பில்வமங்களாச்சார்யர்
10. ஆஸ்வாஸம் 2, ஸ்லோகம் 24

# சைதன்ய மஹாப்ரபு - 12


## நிமாயியும் தர்க்க பண்டிதரும்

ஓவியர் : பாலமுரளி

**உபநயனம் முடிந்தவுடன் நிமாயியின் பெற்றோர்கள் அவரை கங்காதாஸ் பண்டிதரின் பாடசாலையில் வியாகரண சாஸ்திரத்தை கற்றுக் கொள்ளச் சேர்த்தனர்.**



**விரைவிலேயே வியாகரண சாஸ்திரத்தை கற்று முடித்து, வாசுதேவ சார்வபௌமரின் பாடசாலையில் தர்க்க சாஸ்திரத்தை கற்றுக்கொள்ள சேர்ந்தார்.**



**நிமாயி கடினமான பாடங்களை சுலபமாக க்ரஹித்துக் கொண்டார். தன்னுடைய வீட்டுப் பாடங்களையும் சீக்கிரமாக முடித்து விட்டு ஓய்வு நேரத்தில் தர்க்க சாஸ்திரத்தைப் பற்றி ஒரு புத்தகம் எழுத ஆரம்பித்தார்.**




**நிமாயியின் திறமையைப் பற்றி எல்லோரும் போற்றிப் புகழ்ந்தனர்.**



அதே பாடசாலையில் படித்துக் கொண்டிருக்கும் ரகுநாத பண்டிதர் நிமாயி எழுதும் தர்க்க சாஸ்திர நூலைப் பற்றி கேட்டு மனச் சங்கடம் அடைந்தார்.




மற்றொரு நாள்..நிமாயியும் ரகுநாத பண்டிதரும் படகில் சென்று இருக்கும் பொழுது, நிமாயியை அப்புத்தகத்தைப் பற்றி விசாரித்தார்.

புத்தகத்தைப் படித்தவுடன் பண்டிதர் கண்ணீர் விட்டார்.











அவ்வாறு சொல்லிக்கொண்டே இருந்த நிமாயி, தன்னுடைய புத்தகத்தைக் கங்கையில் வீசி எறிந்தார்.




இந்தப் புத்தகம் எல்லோருக்கும் உதவுவதற்காக எழுதினேன். யார் மனதையும் புண்படுத்துவதற்கு விரும்பவில்லை . ஆதலால் இதை கங்கையில் வீசி எறிந்தேன். நிமாயி சிறு வயதிலிருந்து மக்களின் உணர்ச்சிகளைப் புரிந்து நடந்து கொண்டார். இச்சம்பவத்திற்குப் பிறகு மக்களுக்கு நிமாயியின் மீது மதிப்பு மேல் ஓங்கியது.

கண்ணன் வருகின்றான்! கார்வண்ணன் வருகின்றான்!
கடைந்து வைத்த வெண்ணெய் திருடக் கண்ணன் வருகின்றான்!
கள்ளப் பார்வை, கன்னக் கோலுடன் கடிது வருகின்றான்!
வெள்ளை உள்ளம் சூரையாட விரைந்து வருகின்றான்!

பையப் பைய பூனைபோல பதுங்கி வருகின்றான்!
தைய தைய தையத் தாளம் போட்டு வருகின்றான்!
சுட்டிப் பையல்கள் சுழ்ந்து வர சுந்தரன் வருகின்றான்!
குட்டிப் பெண்கள் எட்டிப்பார்க்க கைதட்டிக் களிக்கின்றான்!


துள்ளித் துள்ளி கன்றுபோலத் தூயோன் வருகின்றான்!
வெய்ய நல்ல வேங்கையன்ன வீரன் வருகின்றான்!
ஓரக் கண்ணால் ஜாடை பேசி உயிரை வதைக்கவே,
ராஜநடை போட்டு ராஜமன்னார் வருகின்றான்!

தோழியரே! தோழியரே! கூடி அமர்வோம்!
வாழி! வாழி! கண்ணன் நாமம் வாழி! என்போம்!
கானம் பாடி மனதைக் கடைந்து வெண்ணெய் எடுப்போம்!
வேணு கீதம் விரும்பி உண்ண நாளும் மகிழ்வோம்!

எந்நாளும் மகிழ்வோம்!

~ ஸ்ரீமதி உமாலக்ஷ்மி

ஸ்ரீ பக்தகோலாஹலன் துணை.



# சேங்கனூர் ஸ்ரீ ஸ்ரீ அண்ணா 84வது ஜயந்தி

**தேதி: 7-09-2017 முதல் 13-09-2017 வரை**

**இடம்: ஸ்ரீ ப்ரேமிக ஜன்மஸ்தான்,**

**மஹாத்மா ஸ்ரீ ஸ்ரீ க்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள் வீதி, சேங்கனூர்**

## நிகழ்ச்சி நிரல்

## 7-09-2017

காலை 10 மணிக்கு ஸ்ரீ குருஜி முரளீதர ஸ்வாமிகள் எழுதிய

**"ஸ்ரீ ப்ரேமிக லீலாம்ருதம்"** - புத்தக வெளியீடு

தினசரி காலை சதுர்வேத பாராயணமும், இதிஹாஸ புராணங்களும், ப்ரேமிக க்ரந்தங்களும் பாராயணம் நடைபெறும்.

தினசரி காலை 9 மணி முதல் 11 மணி வரை ஜன்மஸ்தானம் பாடசாலை வித்யார்த்திகளால் ஸ்ரீ ஸ்ரீ அண்ணா அருளிய கிரந்தங்களின் பிரவசனம் நடைபெறும்.

## 13-09-2017

காலை ஸ்ரீ ஸ்ரீ அண்ணா பாதபூஜை, ஆயுஷ்ய ஹோமம், ஆவஹந்தி ஹோமம். பூர்ணாஹுதி, பாதுகை புறப்பாடு, பிரார்த்தனா கீர்த்தனங்கள், பஞ்சஹாரதி

மதியம் திருவாராதனம், ஸமாராதனை

சுபம்.

# படித்ததில்  பிடித்தது

## Meditation And Yoga Can ‘Reverse’ DNA Reactions Which Cause Stress, New Study Suggests

June 16, 2017
ScienceMag

தியானம், யோகா, தாய் சி போன்ற மனத்துடன் தொடர்பு கொள்ளும் பயிற்சிமுறைகள் நமது இறுக்கத்தைப் போக்குவதோடு, உடற்கூற்றின் தன்மையையும் மாற்றி அமைத்து, உடல்நலக்கேடு, மன அழுத்தம் போன்றவற்றையும் போக்குகின்றன என Conventry of Radboud பல்கலைக்கழகங்களின் ஆராய்ச்சி ஒன்று தெரிவிக்கின்றது. Frontiers in Immunology என்ற பத்திரிகையில் வெளியாகியுள்ள இந்த ஆராய்ச்சி, பல்லாண்டுகளாக நடத்தப்பட்ட ஆய்வின் விளைவாக யோகா போன்றவற்றினால் நமது உடற்கூறு எவ்வாறு மாறுபடுகிறது எனவும், மனமாற்றங்களைப் பற்றியும் தெரிவிக்கின்றது.

பல்கலைக்கழக வல்லுனர்கள் வெளியிட்ட முடிவு என்னவெனில், ஒருங்கே செய்யப்பட 18 ஆய்வுகளில், 11 ஆண்டுகளுக்கு மேல் 846 பேர் ஈடுபடுத்தப்பட்டதில், உடலின் மரபணு ஒரு குறிப்பிட்ட வடிவத்தில் மாறுகிறது எனவும், உடலுக்கும் மனத்திற்கும் அது ஏற்படுத்தும் தொடர்பால் உடல் மற்றும் மன நலம் மேம்படுகிறது என்பதும் ஆகும். உடலின் மூலக்கூற்றில் ஏற்படும் மாற்றத்தையே விஞ்ஞானிகள் கவனிக்கின்றனர். இன்னும் சொல்லப்போனால், மூலக்கூறுகள் புரதத்தைத் தூண்டி அதன் வாயிலாக உடலமைப்பின் மாற்றத்திற்கும், மனமாற்றத்திற்கும், நரம்பு மண்டலத்தின் சிறந்த செயல்பாட்டிற்கும் காரணமாகிறது என்று சொல்லப்படுகிறது.

ஒருவர் அழுத்தம் நிறைந்த சூழ்நிலையில் தள்ளப்படும்போது, நரம்பு மண்டலம் எவ்வாறு செயல்படுகிறது எனவும், எதிர்த்துப் போராடுவது அல்லது சூழ்நிலையிலிருந்து வெளியேறுவது, இரண்டில் ஒரு முடிவிற்குத் தள்ளப்படுகிறது. அதற்கேற்ப உடலின் மூலக்கூறுகளின் உற்பத்தி அதிகரிப்பதை kappa B(NF-kB)என்ற கோட்பாடு ஒழுங்குபடுத்துகிறது.

NF-kB அழுத்தத்தை மாற்றி மூலக்கூறுகளை புரதம் அல்லது சைட்டோகின் என்னும் பொருளின் உற்பத்தியைத் தூண்டுகிறது. குறுகிய கால அழுத்தங்களிலிருந்து போராடு அல்லது வெளியேறு என்ற சூழ்நிலைக்கு ஒருவரைத் தள்ளுவது இதுவே. அழுத்தம் நீடிக்குமானால், அதுவே புற்றுநோய் அல்லது மனநோய்களுக்குக் காரணமாகிவிடுகிறது. ஆராய்ச்சியின்படி யோகா போன்ற சாதனைகளை மேற்கொள்பவரின் உடல் எதிர்வினையை வெளிப்படுத்துகிறது. அல்லது NF-kB மற்றும் சைட்டோகின் உற்பத்தி குறைவதால், மரபணு அழற்சி ஏற்பட்டு அதனால் மரபணு சம்மந்தப்பட்ட நோய்கள் குறைகின்றன.

மனவியல், செயல்பாடு, மற்றும் சாதனைகளைப் பற்றி ஆராய்ச்சி செய்யும் நிறுவனமான Conventry Universityயைக் சேர்ந்த Brain Beleif and Behaviour Labன் முக்கிய ஆராய்ச்சியாளர்களுள் ஒருவரான இவானா ப்யுரிக் என்பரின் கூற்று என்னவெனில் உடலையும் மனத்தையும் தொடர்புபடுத்தும் தியானம் மற்றும் யோகா போன்றவற்றை பயிற்சி செய்து பல்லாயிரக்கணக்கான மக்கள் ஏற்கனவே அதன் பலனை அனுபவித்து வருகிறார்கள். இத்தகைய பயிற்சிகள் மரபணு மாற்றத்தை ஏற்படுத்தி மரபு சார்ந்த விஷயங்களை மாற்றுகின்றன என்று அறியமாட்டார்கள்.




| சத்சங்க நிகழ்ச்சிகள் | |
|---|---|
| 7-13 செப்டம்பர் 2017 | சேங்கனூர் ஸ்ரீ ஸ்ரீ அண்ணா 84வது ஜயந்தி உத்சவம் |
| 16 செப்டம்பர் 2017 | ஏகாதசி |
| 1 அக்டோபர் 2017 | ஏகாதசி |

## அறிவிப்பு

**அனைத்து வாசகர்களும், தங்களது தொலைபேசி எண்ணை, தங்களது சந்தா எண்ணுடன் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.**

Email:
helpdesk@madhuramurali.org
Ph: "24895875"

## ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களுக்கு தெரிவிக்க வேண்டிய விஷயங்களை அனுப்பவேண்டிய முகவரி

Dr.A.BHAGYANATHAN,
Personal Secretary to
HIS HOLINESS
SRI SRI MURALIDHARA SWAMIJI
Plot No 11, Door No 4/11,
Netaji Nagar Main Road,
Jafferkhanpet, Chennai - 83.
Tel. : +9144-2489 5875, Email :
contact@namadwaar.org

மதுரமுரளி


- Publisher : S. Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission


- Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the publisher of Madhuramurali.
- Views expressed in articles are those of the respective Authors and do not reflect the views of the Magazine.
- Advertisements in Madhuramurali are invited.




PURANAVA – INTERSCHOOL HERITAGE QUIZ, 12th August, Chennai

Registered with The Registrar of Newspapers for India
R.No 62828/95
Regd. No. TN/CC(S)DN/119/15-17

Date of Publication: 1st of every month
Date of Posting: 5th and 6th of every month
Licensed to post without prepayment
WPP No. TN/PMG(CCR)WPP—608/15-17



Published by S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No2, Old No 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai – 83 and Printed by Mr R. Kumaravel of Raj Thilak Printers (P) Ltd, 1/545A. Sivakasi Co-op Society Industrial Estate, Sivakasi. Editor: S.Sridhar




**திவ்யநாமம், ப்ரஹ்மோத்சவம்,**
**மதுரபுரி ஆஸ்ரமம்**